மாதர்மனோரஞ்சினி.

VOL. 1.	MADRAS: SEPTMBER. 1899.	NO. 7.
புத்த. க.	சென்னப்பட்டணம்: 1899 ௵ செப்டம்பர் ௴.	இல எ.

மரகதவல்லி சுந்தரவல்லி சரித்திரம்.

(முன் தொடர்ச்சி).

இதன் பிறகு அங்குநின்ற மாதைக் கண்டு நீ யார்? உனது வரலாற்றைச் சாங்கோபாங்கமாகத் தெரிவிப்பாயானால் உன்னை இவ்விடத்தினின்று வெளியே கொண்டுபோவோம். இல்லாவிடின் பெண்ணென்று சிறிதும் பாராட்டாமல் எங்கள் கைவாளுக் கிரையாக்குவோம் என்று இருவரும் கூற, அதற்கு அம்மாது பின்வருமாறு செப்புகின்றாள்.

நான் மெய்ஞ்ஞான புரத்தினருகேயுள்ள மகேந்திரபுரியில் வசிக்கும் பரமானந்த செட்டியின் மகள். என் பெயர் மோகனவல்லி யென்றும், வனதாட்சி யென்றும் சொல்வார்கள். மூன்று மாதத்திற்கு முன் என் தந்தையினுடைய கிரகத்தில் மூன்று திருடர்கள் புகுந்து கொள்ளையடித்து என் தந்தையைப் பராரியாக்கி என் பள்ளியறைக்குட் புகுந்து நான் சயனித்திருக்கிறவேளையில் என்னைத்தூக்கிக் கொண்டு இவ்விடம் வந்து சேர்ந்தார்கள். வெளியில் கடை வைத்திருக்கும் கோமட்டியும், மூன்று பேர் காளி கோயிலில் இருப்பவர்களும் திருடர்களே. அவர்கள் வெளிக்குக்கோயிற் பூசாரிகளென்றும், முறை முறையாக வந்து பூசைசெய்கிறவர்களென்றும்

வதந்தி. அவர்கள் திருடப்போகையில் தங்களுக்கிஷ்டமாகிய வேடங்களைத்தரித்துக்கொண்டு போவார்கள். எல்லாருக்கும் பெரிய திருடன் இந்த அறையிற்கிடக்கும் சந்நியாசியே. நான் இவனிடத்திலனுபவித்த கஷ்டங்களனந்தம். மூன்று மாசகாலமாக என்னைத் தன்னிஷ்டப்படி வைததும் அடித்ததும் சொல்லி முடியாது. இன்றையதினம் உம்மால் சுகப்பட்டேன், என்னை என் தந்தையினுடைய கிரகத்திற்குச் சேர்ப்பிக்கவேண்டுமென்று முடித்தாள். இதற்குள் பொழுதும் விடிந்தது. உடனே பின் தாழ்ப்பாள் போட்டிருந்த காளியின் கோயிலைத்திறந்து, அவ்வூர்ப் போலீசாருக்குச் சொல்லியனுப்பிக் கட்டுண்டிருந்த கோமட்டியையும் அறையிற் பூட்டப்பட்ட தபோதனன் வேடங்கொண்ட கள்வனையு மவர்களிடமொப்புவித்து கால் சிதறுண்ட திருடர்கள் மூன்று பேரையும் காண்பித்துப் பிறகு மோகனவல்லியை தனதிருப்பிடத்திற்குப் பயணப் படுத்தியனுப்பினார்கள். அப்பெண்ணவள் போகிற சமயத்தில் தன்னிடத்திலிருந்த கடிதங்களை யவர்கள் வசம் ஒப்புவித்துச் சென்றாள். **வெங்கோபராவும் வீமராவும்** தாங்களணிந்திருந்த உடுப்பைப் சத்திரத்தம்மையார் வீட்டில் கழற்றி வைத்தார்களே யதைத்தரித்து தங்கள் குதிரைகள் மீதேறிக்கொண்டு மெய்ஞ்ஞான புரம் வழியாக விட்டார்கள். சுமார் ஐந்து மைல் தூரஞ் சென்று மறுபடியு மோரிடத்திற்றங்கி மோகனவல்லி கொடுத்த கடிதங்களையெல்லாம் வாசித்ததில் ஒன்றை மாத்திரம் வேறுபடுத்தி மற்ற கடிதங்களையெல்லாம் வீட்டுக்குத் திரும்புங்காலையிலரசனிடம் சேர்ப்பிக்கலாமென்றெண்ணங்கொண்டார்கள்.

வேறுபடுத்திய கடிதத்தில் வரைந்திருந்ததென்னவென்றால்; "மாறு வழி வேடம் சொல்லவும், புனைந்து எமக்கு பிராண சில நேசர்களைத் தந்திரம் காணும்படி சொல்லவும், புறப்படவேண்டும் எண்ணங்கொண்டு இனி மேல் இருப்பதால் அதைப்பற்றி அவர்களை யோசித்தல் எமக்கு நலங்காண்பிக்க." இதைப் படித்தவுடன் அவர்களுக்கொன்றுமருத்தம் புரியவில்லை, கையெழுத்தைப் பார்த்தால் பெண்கள் கையெழுத்தைப் போலிருந்தது. இந்த கடிதத்தை யுடனே சமஸ்தான வித்வானாகிய சமர்த்துள்ள சாம்பசிவக்கவிஞனுக்கு வேறொரு கடிதம் எழுதி யதற்கு விடையடக்கஞ் செய்தனுப்பினார்கள். உடனே புறப்பட்டு அதி வேகத்தோடு **மெய்ஞ்ஞானபுரத்தின்** அக்கிரார வீதியில் சென்றங்கொருவீடு வாடகைக்கு வாங்கி யாராவது **கல்யாணபுரி**யிலிருந்து இரண்டு புருஷர்களாவது பெண்களாவது வந்தார்களா என்று விசாரிக்கத் தொடங்கினார்கள்.

Chapter VII.

வெண்பா - சங்கராபரணம்:

சிறைபட்டவீரர்கள்சிந்தைமிகநொந்து
சிறைநீங்கிகால்வழியாய்ச்சென்று—மறைபுகழும்
ஈசன்திருவருளால்எத்திசையும்போற்றிசைக்கும்
நேசர்களைக்கண்டார்நிஜம்

முன்னமே பத்மாசனியும் அவள் நாயகனாகிய சத்திய சந்தனும் புறப்படுவதன் முன்னமே ஞானசிகாமணி, விவேகசிந்தாமணி, இருவரையும் சிறையினின்று விட்டுவிடும்படி சிப்பாய்களுக்கு ஆக்கியாபித்த வண்ணம் அச்சிறையினின்று அவர்களிருவரையும்விடுதலை செய்தார்கள். அவர்களுக்குப் போக வழியும் தெரிய வில்லை. பசியின் களையோ சொல்லி முடியாது. தாங்கள் கொணர்ந்த குதிரைகளோ மலையினடிவாரத்திலுள்ள மாளிகையின் லாயங்களில் கட்டப்பட்டிருக்கின்றன. சிப்பாய்களோ இச்சிறு கிரகத்தின் கதவுகளை மூடிக்கொண்டு போய்விட்டார்கள். மறுபடியும் சுரங்க மார்க்கமாகச் செல்ல முடியாது. கால் நடையாகத்தான் போகவேண்டுமென்று நிச்சயித்து இருவரும் புறப்பட்டு மலையைச்சுற்றிவந்து அங்கோடும் பாகீரதியைக் கடக்க படவு அகப்படாமையால் அங்கே சற்று நேரம் தங்கி ஒரு ஆளைப் பேசி படவுகாரனைக் கூப்பிட்டு அதின் மீதேறி ஆற்றைக் கடந்து மெய்ஞ்ஞானபுரத்திற்கு வந்தார்கள். தாங்கள் தங்கிய பெரு மாளிகையினிடம் வந்து பார்க்கையில் அங்கே அதிக ஆரவாரத்தோடு ஜனங்கள் உள்ளே செல்லுவதையும் ஆயிரஞ் சந்திரர் களுதயஞ் செய்தாற் போல பலவித விளக்குகள் ஏற்றிப் பங்களாவானது பிரகாசிப்பதையும் லாயங்களில் குதிரைகளும் வண்டிகளும் நிற்கிற அணியணியாக வேடிக்கைகளையும் கண்டு அதிசயித்து உள்ளே சென்று என்ன விநோதம் நடக்கிறதோ பார்ப்போமென்று முடிவு செய்துக்கொண்டார்கள். அங்கே வெளியில் காவலாயிருந்த வேலையாளனாகிய மாதவன் அவர்களை யெதிர் கொண்டுள்ளே யழைத்துக்கொண்டு போனான். உள்ளே செல்லும்போது இருவர்கள் சாணுதப்படியினால் அதனால் மாதவன் சிங்காரம் இந்த இரண்டு வேலைக்காரர்க ளடைந்த அதிசயத்தையும் துக்கத்தையும்கூறிநாங்களினிமேல் அஞ்சவேண்டிய தில்லை காணமற்போன நீங்களகப்பட்டீர் என்று சொல்லி யுள்ளே கொண்டுபோய் விட்டான். அங்கே தர்பார் கூடத்தில் பெரிய சபை கூடியிருந்தது. அச்சபைக்கு அக்கிராசனாதிபதியாய் வீற்றிருந்த புண்ணிய சீலனும் வடிவமும் இளமையும் கம்பீரமுமுள்ள இரண்டு வீரர்களையு முள்ளே வாருங்கள் உங்களுக் கிட்ட ஆசனத்தின்மேலமர்ந்திருங்கள் என்று மலர்வாய் திறந்து செப்பினான்.

அங்கே நடந்த சபையில் வந்திருந்தவர்கள் சுமார் நாற்பது பேர். அதில் வந்திருந்தவர்களின் நாமதேயங்களை வாசித்தார்கள். முதலில் புண்ணியசீலன் அக்கிராசனாதிபதி, புண்டரீகாக்ஷன் உதவி அக்கிராசனாதிபதி சத்திய சந்தன் காரியதரிசி, இன்னும் சிலர் அவர்களுக் களித்தஉத்தியோகத்தைப் பார்த்து வந்தார்கள். ஞானசிகாமணியும் விவேகசிந்தாமணியும் சபைக்கு வந்தவுடன் அங்கிருந்த ஒவ்வொருவருடைய பார்வையுமிவர்கண் மீதிருந்தது. புண்ணிய சீலனும் புண்டரீகாக்ஷனுமோ இமைகொட்டாமல் அவர்களழகைப் பார்த்தவண்ணமே யிருந்தார்கள்.

பி. ஷண்முகசுந்திரம் பிள்ளை பி.ஏ.

மிஸ் ஆர்நால்டு பிரசங்கம்.

1899௵ ஆக்ஸ்டுமீ 4ம் உ வெள்ளிக்கிழமை தினம் கும்பகோணத்தில் கவர்ன்மெண்டு பெண்பாடசாலையில், தேர்ச்சியடைந்த பெண்களுக்கு இனாம் கொடுப்பதற்காகக் கூடியசபைக்கு, அதே டிவிஷன் இனிஸ்பெக்டிரெஸ் ஆகிய மிஸ் ஆர்நால்டு என்பவர் அக்கிராசனாதிபதியாக விற்றிருந்து வெகுமதி கொடுத்தார்: அவ்விடத்தில் அநேக சுதேச ஸ்திரீகளும் கனவான்களும் வந்திருந்தார்கள். அப்பொழுது எட் மிஸ்டிரெஸ் ஆகிய செல்லம்மாள் என்பவர் தன்னுடைய மாணவிகளைக்கொண்டு மனப்பாடம், பாட்டு, டிரில் இவைகளினால் அவள் செய்தது மிகவும் மெச்சத் தகுந்ததுதான். "பிராமணப் பெண்கள் சிறுவயதிலேயே பள்ளிக்கூடத்தை விட்டுவிடுகிறார்கள். பள்ளிக்கூடம் மிகவும் தேர்ச்சியடைந்து விர்த்தியாகிக்கொண்டு வருகிறது. கவர்ன்மெண்டார் சுமார் 1000 ரூபாய் வரையில் சிலவு செய்து அப்பாடசாலையை இத்தன்மைக்குக் கொண்டு வருகிறார்கள் என்று ஹெட் மிஸ்டரஸ் செல்லம்மாள் ரிபோர்ட்டை வாசித்தனள். அங்கு நேர்த்தியாய் ஆடையுடுத்து வந்திருந்த சிறு பெண்களுக்கு மிஸ் ஆர்நால்டு என்பவர் தக்கபடி வெகுமதி கொடுத்து பின்வருமாறு மொழிந்தனர்.

இப்பேர்ப்பட்ட சமயங்களில் சபையார்கள் ஸ்திரீகளாகவாவது அல்லது கனவான்களாகவாவது கூடுவது வழக்கமாயிருக்க இத்தடவையிலோ இருதிறத்தோர்களும் கலந்து வந்திருந்ததைப்பார்த்து மனக்களிப்படைந்தேன். இதனால் தெரிவது யாதெனில் வயது சென்ற சுதேச ஸ்திரீகள்

தங்களுடைய தோழிகளாகிய சிறு பெண்களின் கல்வி விஷயத்தில் தங்களுக்கிருக்கிற ஒரு ஆவலைக்காட்டினார்கள். அது உண்மையாயும், அவர்களுடைய ஸ்திரீகளின் தேர்ச்சிக்காக அவர்கள் வந்திருந்தது நிசமாயிருக்கும் பட்சத்தில், நிச்சயமாய் பிராமணர்கள் ஏராளமாய் இருக்கக்கூடிய அப்பட்டணத்துக்கு ஒருவித கௌரவத்தை அளிக்கக்கூடியது. இப்பட்டணத்தில் புருஷர்களின் படிப்பை விர்த்தி செய்யும்பொருட்டு ஒரு பெரிய முதல் கிரேட் காலேஜி இருக்கிறது. இதை யோசிக்குமளவில் ஸ்திரீகளின் கல்வி இப்படியில்லாமல் கேவலம் அற்பமாயிருப்பது மிகவும் வருத்தமாயிருக்கிறது. எனக்குப் பலதடவை தோன்றுவது யாதெனில் ஸ்திரீகளின் படிப்பு இவ்விதமாகப் பாழ் அடைந்ததற்கு முக்கியகாரணமாவது சுதேச ஸ்திரீகள் தங்கள் தங்களுடைய பெண்களை ரிரம்பவும் சிறுவயதில் பள்ளிக்கூடத்திற்குப் போகாதவண்ணம் தடுத்திருப்பதே. இங்கும் சிறுவர்கள் வருஷாவருஷம் கொஞ்சம் கொஞ்சமாய்த் தேர்ச்சியடைய அவர்கள் அவ்விதக்கல்வியைப் பெண்களுக்கு எட்டாமல் வைத்திருப்பதை பார்க்க வருத்தமாயிருக்கிறது. பாடசாலைகளில் நன்றாய் விர்த்தியடையக்கூடிய பெண்களிருக்கிற விஷயத்தில் எனக்குச் சந்தோஷமாயிருந்தும், அவர்களை மென்மேலும் விர்த்தியடையாது தடுத்து வைத்திருப்பது மிகவும் வருத்தமாயிருக்கிறது. நன்றாய்ப்படித்த ஆடவர்கள் கூட பெண்கள் கல்வியில் அலக்ஷியமாயிருக்கிறார்கள். அப்பேர்ப்பட்டவர்களுக்குச் சொல்வது என்னவென்றால் ஒரு தேசத்தின் தேர்ச்சியானது பெண்களின் கல்வியினது பரவலுக்குத் தக்கபடி யென்ற சரித்திர நியாயம் உண்மையே. நான் எப்போதும் ; இனி இந்தியாவின் பிற்பட்ட காலம், முடிய பெண்களின் ஆளுகைக்குள்ளாகும் என்ற எண்ணம் கொண்டிருக்கிறேன்.

திவான்பகதூர் ஆர் ரகுநாத ராவ் அவர்கள் தற்காலம் பெண்கள் கல்வியின் தேர்ச்சியைப்பற்றியும், அதின் பலவிதக் குறைவுபாடுகளைப் பற்றியும், அவ்விதக் குறைவுபாடுகளை நீக்கக்கூடிய வழிகளைப்பற்றியும் ஒரு பிரசங்கம் செய்தார். டவுன் ஹைஸ்கூல் எஸ். கிருஷ்ணசாமி ஐயர் மேலேகண்ட திவான் பகதூர் அவர்களுடைய சிற்சில கேள்விகளுக்கு விடை கொடுத்தார். பிறகு சபைத்தலைவருக்கு வந்தனமளித்தவுடன் சபைகலைந்தது.

JL
Y15m211, M99M
M99,1-2

சென்னையிலுள்ளகாட்சி.

I.

படகும், கால்வாயும்.

சென்னை இராஜதானியில் சிலஜில்லாக்களில் பெரிய ஆழமானநதிகளிருக்கின்றன. இந்தநதிகளைத்தாண்டிப் போவதற்காக வாராவதி அல்லது பாலங்களை கவர்ன்மெண்டார்கட்டி யிருக்கிறார்கள். வாராவதி கட்டப்படாத காலத்தில் ஜனங்கள் மூங்கிலையாவது பலகையையாவது தெப்பம்போல சேர்த்துக்கட்டி தண்ணியில் மிதக்கவிட்டுச் செல்லுவது வழக்கம். கெட்டியான மூங்கில்களை சக்கிரத்தைப்போல் வளைத்து நடுவில் மூங்கில்களை சரியாய்ச் சேர்த்து பின்பக்கம் தோலால் மூடி படகாகச்செய்து இதில் அடங்கக்கூடுமான ஜனங்களை ஏற்றிக்கொண்டு செல்வதுமுண்டு.

வாராவதி யிருக்குமிடங்களில் கூட சாமான்களை சில கிராமங்களுக்குக் கொண்டு போவதற்காக படகுகள் உபயோகப்படுகின்றன. ஸ்ரீரங்கம், திருச்சினாப்பள்ளி, கரூர் முதலிய விடங்களிலுள்ள காவேரி நதியில் இவ்விதமான படகுகளைச் செலுத்துவதைப்பார்த்திருக்கலாம். இவைகளில் வேடிக்கையாகவும் சிலர் போவதுண்டு.

சென்னையில் நதிகளில்லாவிட்டாலும் சிறு கால்வாய்களிருக்கின்றன. இவைகளில் ஜலம் உபயோகமில்லாமற்போனாலும் அநேக வியாபாரிகள் படகுகளில் சாமான்களை ஏற்றிக்கொண்டு வெகு தூரம் செல்லுகிறார்கள். மேலும் வசந்தகாலத்தில் பலவிதபுஷ்பங்களும் புஷ்பிக்கும். மரங்களில் பக்ஷிகள் உட்கார்ந்து பாடிக்கொண்டிருக்கும். பகல் உஷ்ணமாயிருந்த

போதிலும் நீரோட்டத்திற் கருகாமையிலிருக்கும் செடிகளின் அழகையும், நானாவித கட்டிடங்களின் அழகையும் பார்க்கப்பார்க்க கண்பூத்துப்போம். இவ்விதரம்மியமான வசந்தகாலத்தில்பாடசாலைப்பிள்ளைகள் படகில் சென்று இவ்வேடிக்கைகளைப் பார்ப்பதினால் சந்தோஷத்தை உண்டாக்கும். புத்தியும் விசாலப்படும். இதற்காகவே சென்னையில் படிக்கும் சிறுவர்கள் படகுக்கு ஒன்று அல்லது இரண்டு ரூபா கொடுத்து ஒரு தினம் படகேறி உல்லாசமாக பேசிக்கொண்டும் விளையாடிக்கொண்டும் செல்வார்கள். ஆங்கிலேயப் பெண்மணிகளும் செல்வதுண்டு. அநேக காட்சிகளை இவர்கள் பார்ப்பதும் தவிர, படகை இவர்களே செலுத்துவதினால் இவர்களுக்கு பலத்தையுமுண்டாக்குகிறது. இது சென்னையில் ஓர் வேடிக்கை.

கமலாக்ஷி, சந்திரமுகி என்ற இரண்டு சகோதரிகளுக்குள் நடந்த சம்பாஷணை.

இராமதாஸ் சுவாமியின் சிறை யிருப்பிடமாகிய கோல்கோண்டாவின் விவரணம்.

கமலாக்ஷி.—அக்கா, சென்ற ஆறுமாதகாலமாய் உன்னையும் நம்மருமைச் செல்வமாகிய மோகனத்தையும் பார்க்காது என் கண்ணெல்லாம் பூத்ததே. இத்தனைநாட்களில் நீ எனக்கு கடிதங்கள் கூட அடிக்கடி யெழுதினாயில்லையே கடிதங்கள் எழுதக்கூட சாவகாசமில்லாமல் யாத்திரை செய்தீர்களாக்கும் ?

சந்திரமுகி.—கமலம், நான் அடிக்கடி உனக்கு கடிதங்களெழுதாமலிருந்ததைப்பற்றி வந்தவுடன் நீ கேட்பாயென்பதறிந்திருந்தேனாகிலும் போயிருந்த விடங்களில் பிரதிதினமும் வெளியிற் சென்று அங்கங்குள்ள விநோதக் கண்காக்ஷிகளைப் பார்த்து வீட்டுக்குத் திரும்பும்பொழுது மெத்த ஆயாசமாயிருக்கும்: அப்படிக்கிருந்தும் என்னால் கூடிய மட்டும் சாவகாசத்தைத்தேடி யுனக்கு 20 நாளைக்கொருகடிதமாவது அனுப்பி யிருக்கிறேனே. அதுவே பெருத்த காரியமென்று நினை.

கமலாக்ஷி,—அக்கா பிரதிதினமும் ஏதாவது விசேஷம் பார்த்தோமென்றாயே அவைகளில் மிகவிசித்திரமானதாவது ஒன்றேனும் எனக்கு விரித்தெ

முதிறையில்லையே. நான் தான் கண்ணுரைப்பார்த்தானந்திக்க கொடுத்துவைக்கவில்லை அவைகளைப்பற்றி எனக்கு நீ எழுதினவளுமில்லை. நானும் உங்களுடன் கூட வருகிறேனென்று சொன்னதற்கு என்மைத்துனர் அப்படியே யழைத்துப் போவதாக ஒப்புக்கொண்டும், நீ ஏதோ சில நியாயங்களை யெடுத்துச்சொல்லி எனக்கு தர்மபோதனைசெய்து போய்விட்டாய்.

சந்திரமுகி.—கமலம் இதென்ன நீ யொன்றுமறியாதவள் போல் பேசுகிறுயே. நீ அதிபால்லியமாய்ச் சிறுகுழந்தையாய் தொட்டிலிலே கிடக்கையில் நாம் தாயை யிழந்தோமாகையால் நம்மைபரிபாலிக்கத்தக்க புருஷர் யாரும் இல்லாதிருந்த நிமித்தம் உன்மைத்துனர் தங்கள் உற்றார் பெற்றோர்களையுமுபேக்ஷித்து அனாதையாய்க்கிடந்த நாம் வீடுவந்து சேர்ந்து அது முதல் தாயிழந்த உன்மீது அடங்கா அன்புவகித்து வளர்த்தவராதலால் அபிமான மிகுதிகொண்டு உன்மனங்கோணுவண்ணம் நீ வருகிறேனென்று சொன்னதும் உன்னையழைத்துப் போவதாகச் சொன்னர். ஆயின் நீ அப்பொழுதைப்போல் குழந்தையாயிருந்தால் எனக்கும் உன்னையழைத்துப்போவதில் எண் மடங்கதிகசந்தோஷமேயிருக்கும். அப்படிக்கில்லாமல் நீ யோர் புருஷனுக்கு மாலையிட்டு அவர் தம்மாக்கினைக்குட்பட்டுவிட்ட பிறகு அவர் தம்முத்திரவன்றி நீ யாதுஞ்செய்ய உனக்குச் சுதந்தரமில்லையே. உன் மாமி மாமன் இவர்களின் முதுவயதில் அவர்களின் பணிவிடைசெய்வதும் உன் புருஷனுக்கு மனதிற்கிசைந்து நடப்பதுமே நாங்கள் சென்றவிடங்களிற் பார்த்தானந்தித்ததைப் பார்க்கிலும் நூறுமடங்கதிகமான சந்தோஷத்தை விளைவித்திருக்குமே. நீ வராமற்போனாலும் நான் பார்த்து வந்த விசேஷங்களிலொன்றுவிடாமல் உனக்குச்சொல்லுகிறேன். நீ சற்று கவனமாய்க்கேட்க வேணடும்.

கமலாக்ஷி.—அக்கா நீங்களிந்த ஊர்விட்டுப்புறப்பட்டது முதல் ஒவ்வொன்ருய்ச் சென்ற ஆறு மாதத்து விசேஷங்களும் சொல்லுவதென்ருல் வெகுகாலம் பிடிக்கும். மணியோ ஐந்தடிக்கக்கேட்டோம். என் கொழுநன் வழக்கமாய் கச்சேரியிலிருந்து 6-மணிக்கு வீடு வருவார். அவர் வந்த பிறகு எனக்கு ஒரு நிமிஷம்கூட சாவகாசமிராது. அவர் நித்தியமாகச் சாயங்காலம் வீடு வந்ததும் ஸ்நானஞ்செய்து தம் மாதாபிதாக்களையும் என்னையுமழைத்துக்கொண்டு எங்கள்குலதெய்வமாகியவேணுகோபால சுவாமி கோயில் சென்று தரிசித்துவந்தாலொழிய முதி

யோர்களுண்ணுராதலால், அவர் கச்சேரியிலிருந்து திரும்புவதற்கு ஒரு மணிநேரசாவகாசமிருக்கிறதற்குள்ளாக முக்கியமானதா யொரு விசேஷம் சொல்லு. மற்ற விவரம் பின்னால்நான் வரிசையாக தெரிந்து கொள்ளுகிறேன்.

சந்திரமுகி.—கமலம், நீ சற்றுமுன் நான் உன்னையென்னுடனழைத்துப் போகாததையிட்டுக் குறை கூறினையே. ஒரு நாளொன்றில் சாயங் காலத்தில் ஒரு மணிநேரம் சர்வகாசத்தை தவிர மற்றெப்பொழுதும் உனக்கு வீட்டு வேலை சரியாயிருக்க இதையுபேக்ஷித்து வருவது நீதியாகுமோ. இது வன்றேகுலப்பெண்களுக்கழகு. நீ இப்பொழுது சொன்னதைக்கேட்க எனக்கு வெகு சந்தோஷமாயிற்று. நான் வீடு சென்றால் உடனே உன்மைத்துனற்கு உன் நற்குணத்தை எடுத் துரைத்தால், உன்னை மார்மேலும் தோள்மேலும் வைத்து வளர்த்த வராகிய உன்மைத்துனருக்கு எவ்வளவு திருப்தியுண்டாகும். அவர் உனக்குப்புகட்டி வந்த நற்புத்தி யிவ்விதபலன்களை உண்டாக்கியது உன் மகிழ்ந்த வாழ்வுக்கு அறிகுறியல்லவா? இவ்வித நற்குணநற் செய்கைகள் மென்மேலு மோங்கிவளர நமது வேணுகோபாலசுவாமி அருள்புரிவார். உலகத்தில் சகலவித நன்மையும்பெற்று நீங்கள் சதி யும் பதியும் குணத்திற் சிறந்த பலகுழந்தைகளைப்பெற்று க்ஷேம மாய் வாழ்வீர்கள். இது நிற்க நாங்கள் சென்று பார்த்து வந்த வைகளில் முக்கியமானதா யொன்றுண்டு. அதனை விரித்துரைப்பேன் கேள்.

நாங்கள் இவ்விடமிருந்துபுறப்பட்டபொழுது கங்காயாத்திரையல்லவா உத்தேசமாயிருந்தது. அப்படி போகும்வழியிலுள்ள திவ்யக்ஷேத்திரங் களைத் தரிசனம் செய்து போவதாகக்கொண்டு காஞ்சிபுரம், காளாஸ் திரி, திருப்பதி முதலிய க்ஷேத்திரங்களிற் சென்று விதிப்படி ஸ்நானதான தரிசனாதிகள் செய்துகொண்டு ராயச்சூர் தாண்டி வாடியென்ற ஸ்டேஷனுக் குப்போனதும் நம்நாட்டில் ஏதோ கர்ம வசத்தால் வியாபித்து மகா விபத்துகளை யெல்லாம் ஜனங்களுக்கு விளைவித்துக்கொண்டிருக்கிற பிளேக் என்ற விஷசுரம் அதற்கப்பால் எங்கும் பரவியிருக்கிறதாகவும், ஆதலால் இப்பொழுது நாங்கள் அந்தஇடங்களில் யாத்திரை செய்வது சரீரசௌக் கியத்துக்கு அத்தனை அநுகூலமல்லாததுடன், சரீரத்தில் சொற்பச்சோர்வு எந்த காரணத்தாலேற்பட்டிருந்தாலும் அது விஷசுரமே யென்று தீர்மா

னித்து அங்கங்கே யிதற்கென்றேற்பட்டிருக்கும் டாக்டர்கள் மகா அசௌகரியமான இடங்களாயிருந்தாலும் நம்மை நிறுத்தி வெவ்வேறாகஒரோரிடங்களில் 10-தினம் வரை வைத்து வருகிறதாயும் பல ஜனங்கள் சொல்லக் கேட்டு நமக்கிப்பொழுது கங்காஸ்நானம்பிராப்தமில்லை யென்று தீர்மானித்தோமாயினும், கங்கைக்குத் துல்லியமான கிருஷ்ணா கோதாவரி ஸ்நானம் செய்து கொண்டாவது வீடு திரும்பலாமென்றெண்ணி வாடிக்கு அப்பால் போகாமல் தெற்குப்பாதையாய் ஐதராபாக்கம்வழியேகிருஷ்ணா கோதாவரிக்குப் போவது சமீபமாதலால் ஐதராபாக்கத்துக்குடிக்கட்டுகள் வாங்கிக்கொண்டு அவ்விடம் போய்ச்சேர்ந்தோம். ரெயிலில் நாங்கள் போனவர்கள் ஐதராபாக்கம் சமீபமானவுடன் வெளியே பார்த்தபொழுது ஓர் மகாவிஸ்தீர்ணமான சிறந்த தடாகமும் மற்றப்புறங்களில் மூன்றடுக்கு நான்கடுக்குமாளிகைகளுமாக இதுவே குபேரபட்டணம் என்று திகைக்கத் தக்கனவாயிருந்தது. ஐதராபாத்தில் தங்குவதைப்பார்க்கிலும் செகந்திராபாத்தில் தங்குவது அதிகவசதியாயிருக்குமென்று சிலர் சொல்லக் கேட்டு செகந்திராபாத்திலிப்பொழுது உத்தியோகத்திலிருக்கும் நமது லீலாவதியின் புருஷன் மல்லிகார்ஜுனருக்கு வாடி ஸ்டேஷனிலிருந்தே ஓர் தந்திகொடுத்திருந்தபடி அவர்கள் வந்து ஸ்டேஷனில் காத்திருந்தபடியால் செகந்திராபாத்தில் மாலை 6-மணிக்கிறங்கி வெகு விசாலமான மாளிகையொன்று எமக்கென்றேற்படுத்தி அங்கே வேண்டும்வேலைக்காரர்களும் இதரசவுகரியங்களும் அமைத்து வைத்திருந்ததற்கு அவருக்கு அளவிறந்த வந்தனமளித்து அன்றிரவு ஸ்நானம், போஜனமுதலியவை முடிந்த பிறகு அந்த ஊரில் என்னென்னவிசேஷங்கள் பார்க்கத்தக்கனவை யென்று ஓர் ஜாப்தா தயார் செய்து மறுநாட் காலையில் கொடுக்கும்படி யவரைக்கேட்க அவருமப்படியே ஒப்புக்கொண்டு தன் விடு சேர்ந்தார்.

V. A. G.

(இன்னும்வரும்.)

மும்மீன் கதை.

சிந்து நதியின் மடுவில் மூன்று பெரிய மீன்களிருந்தன. இவைகள் புத்தியுள்ளவைகள்; இவைகளின் பெயர் தீர்க்க தேரிசி, பிராரீத்தகால தேரிசி, தீர்க்க சூத்திர தேரிசி, இம்மூன்றும் வெகு காலமாக அந்த மடுவில்சிநேகமாய் வசித்துத்துக் கொண்டிருந்தன. இப்படி இவைகளிருக்கும் பொழுது

ஒருகாலத்தில் மழைபெய்யாததினாலும் அதிக உஷ்ணத்தினாலும் இம்மடுவிலுள்ளஜலம் வடிந்தும், காய்ச்சலால் உலர்ந்தும் போவதை தீர்க்கதரிசி கண்டு பயந்து தன்னுடைய சிநேகிதர்களிடத்தில் பின்வருமாறு சொல்லிற்று. "தோழர்களே நாமிருக்கிற மடுவினுடைய ஜலம் வறண்டும், வடிந்தும் போகிறது. இனி நாம் இங்கிருந்தால் செம்படவர்கள் வலை வீசும் பொழுது அதில் அகப்பட்டுக் கொள்வது நிச்சயமே. மேலும் இதில் இனிமேல் நாம் ஒரு நிமிஷங்கூட தங்கியிருக்கக்கூடாது. ஜல மிருக்கிற வழியாகச் சென்று ஆழமுள்ள மடுவிலாவது அல்லது குளத்திலாவது வசிப்போம்."

பிரார்த்தகால தெரிசியும், தீர்க்க சூத்திர தெரிசியும் இதைக் கேட்டவுடன் "இந்த இடத்தில் வெகுநாளாயிருந்தோம். இந்த மடுவின் ஜலம் அதிக உஷ்ணத்தினால் வறண்டிருக்கிறது. மழை பெய்தால் ஜலம் ஜாஸ்தி ஆய்விடும். நாமிதைவிட்டுப் போகவேண்டியதில்லை. மேலும், செம்படவர்கள் இங்கு வரவேமாட்டார்கள். பைத்தியக்காரா" என்று சொல்லின. ஐயோ! இந்த மூடர்களுக்குபுத்தியிருந்தும் என்ன பிரயோசனம்? இவர்களுக்குப் பின்னால் வரும் கெடுதலை சொன்னால் கேட்கமாட்டோம் என்கிறார்களே என்று பலவாறாக வருத்தப் பட்டுக்கொண்டு "துன்பப் படுகிற முன்னிலையிற் றெரியுமென்று" சொல்லிவிட்டு தீர்க்க தெரிசியானது நீர்வளமுள்ள பெருங்குளத்திற்குப் போய்விட்டது. மற்ற இரண்டு மீன்களும் அம்மடுவிலேயே வசித்துக்கொண்டிருக்கும்போது ஜலமானது அதிகமாக குறைந்துகொண்டு வருவதைக்கண்டு அதிக விசனப்பட்டுக்கொண்டிருந்தன. இப்படி யிருக்கும் பொழுது ஒருநாள் செம்படவன் அநேக விடங்களுக்குச் சென்றும் மீன்கள் அகப்படாமையால் நதியின் கரையோரமாக ஏதாவது மீன்களகப் படுமோ வென எண்ணிக்கொண்டு இந்த இரண்டு மீன்களிருக்கும் இடத்திற்கு வந்து ஜலமிருப்பதைக் கண்டு வலைவீசினான். உடனே இரண்டு மீன்களும் அகப்பட்டுக் கொண்டன. பிரார்த்த கால தெரிசியானது ஜாக்கிரதையாய், வலையை மெள்ள கடித்துக்கொண்டு ஓரிடத்தில் செத்தேன் பிழைத்தேன் என்று சொல்லிக்கொண்டு பதுங்கி யிருந்தது, தீர்க்க சூத்திர தெரிசி யானது பிராணனைக் காப்பாற்றிக்கொள்ளும் வகையறியாமல் வலையில் அகப்பட்டு மாய்ந்தது. ஆனதால் முன் ஜாக்கிரதையும் பேரறிவு முள்ளவர்கள் ஆபத்து காலத்தில் எப்படியுக் தப்பித்துக்கொண்டு பிழைப்பார்கள். அறிவும் ஜாக்கிரதையு மில்லாதவர்கள் எந்தக்காரியங்களையும் யோசியாமல் எதிராளியிடத்தில் சிக்கி இறந்துபோவார்கள் என இக் கதையால் விளங்குகிறது.

உலகத்தில் ஜீவ ஜெந்துக்கள் பரவியிருக்கும் வகை.

உலகத்தில் வெவ்வேறு தேசங்களில் வெவ்வேறு விதமான ஜெந்துக்கள் பரவியிருக்கின்றன என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். உதாரணமாக இந்து தேசத்தில் புலி யானை முதலிய மிருகங்கள் இருக்கின்றன. இங்கிலர்ந்து சீமையில் அவைகள் இல்லவேயில்லை. ஆப்பிரிக்காகண்டத்தில், தீக்குருவியும், நீர்க்குதிரையும் இருக்கின்றன. அவை நமது தேசத்திலில்லை. இதற்கு எதாவது காரணமுண்டா என்பதையும் உலகத்தினது கண்டங்களுள் எவ்விதமாய் ஜெந்துக்கள் பரவியிருக்கின்றன என்பதையும் சற்று யோசித்துப் பார்ப்போம்.

எல்லா தேசங்களிலும் எதவாது சில விதமான ஜெந்துக்கள் இருக்கின்றன. வருஷத்தில் ஒன்பது மாதம் பனிக்கட்டிகளால் மூடப்பட்ட குளிர்ந்த தேசங்களாகிய துருவத்திற் கடுத்த சீமைகளிற்கூட உயிருள்ள ஜெந்துக்கள் உண்டு. உயிர் வாழும் ஜெந்துக்களில் முக்கியமான சிலவற்றைப் பார்த்தால், அவைகளிற் சில உலகத்தில் பற்பலஇடங்களில் பரவியிருக்கின்றன. மற்றுஞ் சிலவோ சிலவிடங்களில்தான் பரவியிருக்கின்றன. உதாரணமாக, மனிதன் சற்றேறக்குறைய உலகமுழுமையும் பரவியிருக்கிறான். எலியும் அப்படிதான். புலி இவ்விரண்டு ஜெந்துக்களைப்போலவ்வளவு அதிகமாயில்லாவிடினும், இந்தியா, பர்மா, மலேயா, சீனு முதலிய தேசங்களிலிருக்கிறது. சில மீன்கள் ஒரே ஒரு நதி அல்லது ஏரியில்தானிருக்கின்றன.

பெரும்பாலும்; ஒரே ஜாதி ஜெந்து தொடர்ச்சியா யிருக்கும் தேசங்களில்தான் பரவியிருக்குமே யல்லாது, வெவ்வேறு மூலைகளிலிருக்காது. ஆனால் இந்த விதிக்கு விலக்கான மிருகங்கள் சில உண்டு. இவைகளுள் முக்கியமானது ‘டேபிர்’ (Tapir) என்றது. இது யானையைப் போன்ற ஓர் மிருகம். இது மலேயாவிலும் தென் அமெரிக்காவில் சில பாகங்களிலும் இருக்கின்றது. இடையே எங்கேயுமில்லாமல் இவ்வளவு தூர தேசங்களில் இது இருப்பதற்கு என்ன காரணம்?

அங்கங்கே இந்த மிருகங்கள் கடவுளால் முதலில் சிருஷ்டிக்கப்பட்டன வென்றும், இவைகளுக்கு ஒன்றுக்கொன்று சம்பந்தமில்லை யென்றும், சிலர் சொல்வார்கள். ஆனால் அது தப்பு. இவ்வுலகம்; மனிதன் முதலில் உண்டானதற்கு வெகு காலத்துக்கு முன்னாலேயே இருந்துகொண்டிருக்கிறது. மற்ற ஜெந்துக்களைக் குறித்து யோசிக்குங்கால் மனிதன் நேற்று வந்தவன்

இந்த 'டேபிர்' என்னும் மிருகம் உலக முழுதும் வெகு காலத்துக்கு முன் பரவியிருந்தது என்பதற்கு வேண்டிய சாக்ஷிய மிருக்கிறது. தராசத்துக்களை வெட்டியெடுத்தால் அவைகளுக்குள் இதனுடைய எலும்புகள் அகப்படுகின்றன.

மிருகங்களும் ஜெந்துக்களும் அவையவைகள் தங்கள் வாசஸ்தலமாகிய குறிப்பிட்ட சில தேசங்களில் மாத்திரம் இருப்பானேன்? உதாரணமாய் புலி இங்கிலாந்து சீமையில் ஏன் இருக்கக்கூடாது? இதற்கு பொதுவாய் காரணம், எந்த தேசத்து சீதோஷ்ணஸ்திதி எந்த ஜெந்துவுக்கு பிடித்திருக்கிறதோ அந்த தேசத்தில் தான் அது வளரும் என்று சொல்வார்கள். இது அநேகமாய் சரிதான். ஆனால் புலி சீன தேசத்தில் ஏராளமாய் இருப்பானேன். ஏறக்குறைய அதே (latitude) இலிருக்கும் இங்கிலாந்திலில்லாதிருப்பானேன். அதற்கு மற்றொரு காரணமுமுண்டு. மிருகங்கள் ஒரு தேசத்திலிருந்து மற்றொரு தேசத்துக்கு பரவாமலிருப்பதற்கு மலை, பாலைவனம், கடல் முதலிய தடைகளுண்டு. இக்காரணத்தால்தான் இந்தியாவில் புலி இருக்க, அருகாமையிலிருக்கும் இலங்கைத்தீவில் அது சுத்தமாயில்லை. இதே காரணத்தால்தான் ஆபிரிக்காவில் ஸஹாரா பாலைவனத்துக்கு தெற்கேயிருக்கும் மிருக ஜாதிகளுக்கும், வடக்கே யிருப்பவைகளுக்கும்அதிக வித்தியாசமிருக்கிறது. சில ஜெந்துக்கள் எப்பேர்க்கொத்த தடைகளையும் தாண்டி பரவும் சக்தியுள்ளவைகளாயிருக்கின்றன. உதாரணமாய் மனிதன் மலை கடல் முதலியவைகளை யெல்லாம் தாண்டும் சக்தியுடையவன். பறவைகளுமப்படியே. அநேக மிருகங்களுக்கு சமுத்திரத்தைக்கடக்க சக்தியில்லை. தவளைக்கு கடல் நீர் பொறுக்காது. ஆதலால் தான் அநேகம் தீபாந்தரங்களில் தவளையேயில்லை. தவிர மனிதனைப்போல மிருகங்கள் முதலான இதர ஜெந்துக்களுக்கு அந்தந்த தேசத்து சீதோஷ்ணஸ்திதிக்குத் தகுந்தபடி உடைகளைத் தரித்துக்கொள்ளவும் அதிக உஷ்ணத்தையும் அதிக சீதத்தையும் தாங்கவும் திறமையில்லை.

தீவுகளைக்குறித்து பேசுங்கால், அவைகளைக்குறித்து சில சமாசாரம் இங்கே சொல்வோம். உலகத்திலுள்ள தீவுகளை யெல்லாம் பொதுவாய் இரண்டு பெரிய பிரிவுகளாய்ப் பிரிக்கலாம். அவையாவன, இயற்கையா யுண்டான தீபாந்தரங்களும், பூகம்பம் முதலிய காரணங்களால் மற்ற பூமியிலிருந்து பிரிக்கப்பட்டு தீவானவைகளுமாம். இவைகளைக் கடற்றீவுகள் (Oceanic islands) என்று சொல்லலாம். முதல்வகுப்புக்கு உதாரணமாய், லக்ஷத்தீவுகள், அந்தமான், நிகோபார் தீவுகளையெடுத்துக்கொள்ளலாம், இவைகள் எண்

ணிறந்த சிறு பூச்சிகளாகிய பவழப் பூச்சிகளால் அநேக கோடி வருஷங்களாய் உண்டாக்கப்பட்டன. இன்னும் பவழப்பூச்சிகள் திடல்களுண்டாக்கிக் கொண்டிருக்கின்றன. இரண்டாவது வகுப்புக்கு உதாரணமாய் லங்கைத்தீவு, பிரித்தானியாதீவு முதலியவைகளை எடுத்துக்கொள்ளலாம். இவை ஒரு காலத்தில் மற்ற பூமியோடு சேர்ந்திருந்தவை. பூகம்பம் முதலிய காரணங்களால் அதினின்றும் பிரிக்கப்பட்டிருக்க வேண்டும். இதனால் தான் இந்த இரண்டாவது வகுப்புத் தீவுகளில் பெரிய மிருகங்கள் இருக்கின்றன. முதல் வகுப்புத் தீவுகளில் அவை யில்லை. மேற்சொன்னவைகளில் சிங்கம், புலி, கரடி முதலிய பெரிய மிருகங்களில்லவே யில்லை. தவளையுமில்லை. அது ஏனெனில் அவை மற்ற பூமிக்கு வெகு காலத்துக்குப்பின் உண்டானவை. ஆகையால் பெரிய மிருகங்கள் தாமாயவ்விடங்களிலுண்டாவதற்கு வேண்டிய காலமின்னு மாகவில்லை. அம்மிருகங்கள் மற்ற இடங்களிலிருந்து வருவதற்கு நடுவே சமுத்திர மிருக்கிறது.

இன்னும் பொதுவாய் ஒன்றிரண்டு விஷயத்தைக் குறித்து இங்கு சொல்லலாம். எலிகளில் இரண்டு விதமுண்டு: கறுப்பு எலி, வெள்ளை எலி. கறுப்பு எலியானது முதல் முதல் இந்தியாவிலிருந்து தான் மற்றஇடங்களுக்கு போயிற்று. ஐரோப்பா முதலான இடங்களில் அதிகமாய்ப்பரவியிருந்தது. வெள்ளை எலியோ சீனதேசத்தில் உண்டாய் மற்ற தேசத்திற்கு பரவியது. இப்போது சென்னை நகரத்தில் பார்த்தால் முக்கியமாய் வெள்ளை எலிதானிருக்கிறது. கறுப்பு எலியை வெள்ளை யெலி துரத்திவிட்டது. கறப்பாம் பூச்சியிலும் இரண்டு வகை யுண்டு. கீழ்தேசத்து பூச்சி யொன்று, அமெரிக்கா தேசத்து பூச்சியொன்று. இப்போது சென்னையிலிருக்கும் பூச்சிகளெல்லாம் அமெரிக்கா தேசத்து பூச்சிகள்தானேயொழிய கிழக்கு சீமை பூச்சிகள் இல்லவே யில்லை. இது மிகவும் வியக்கத்தக்கது.

கே. ஜி. வெங்கட்டசுப்பையர்,
B.A., B.L., L.T.

NEWS & NOTES.

போறையார் இந்து பெண் பாடசாலை :—இந்த பாடசாலையை 4-வது வகுப்பு வரையில் சொல்லிக்கொடுக்கிற பாடசாலையாக இந்த மாதம் முதல்கொண்டு ஏற்படுத்தி யிருக்கிறார்கள்.

மானிடருக்குச் சராசரி உயரம் 5 அடி 6 அங்குலமும், ஸ்திரீகளுக்கு 5 அடி, 2 அங்குலமுமாம். ஜனங்கள் சுகத்திலும் பலத்திலும் விருத்தியடையுந்தோறும் அவர்கள் வளர்ச்சியும் அதிகரித்துவரும்.

மிஸ்டர் என் சுப்பிரமணியம் தமது காலஞ்சென்ற மனைவியரின் ஞாபகார்த்தம் வைத்தியம் பயிலும் மாணாக்கர்களுக்கு உபயோகப்படும்படி ரூ 6000 தர்மமாக சர்வகலாசாலைக்கு சென்றமாதம் அளித்தனர்.

உலகமெல்லாவற்றிலுமுள்ள பூண்டுகளில் அதிகம் நீண்டது கடற்பூண்டாம். உஷ்ணமண்டலக்கடல்களில் ஓரினமான பூண்டு 600 அடி உயரமுள்ளதாய்க் காணப்படுகிறதாம். இது கடலடியிருந்து ஓர் வளர்ச்சியையும் பெற்றுக்கொள்ளுகிறதில்லையாம். இது தண்ணீரில் கலந்திருக்கும் வாயுவிலும், லோகதாதுவிலுமிருந்தே வளர்ச்சியடைகின்றதாம்.

நமது வைஸிராய் அதாவது கவர்னர் ஜெனரலாகவிருக்கும் லார்ட் கர்ஸன் மனைவியார் மேயோ அநாதிப்பிள்ளைகள் படிக்கும் பாடசாலைக்குச்சென்று பின்வருமாறு அபிப்பிராயப் பட்டிருக்கிறார். பாடசாலையின் ஏற்பாடும் போதனாமுறையும் சந்தோஷிக்கத்தக்கதாயிருக்கின்றன. பெண்களுக்குத் தேவையானதைப்போதித்து வருவதையும் தவிர பெண்களுக்கு தங்கள் படிப்பிலும் வேலையிலும் விருப்பமுண்டாயிருக்கிறது. இவைகள் மெச்சத்தகுந்தன.

எறும்புகள் ஒன்றையொன்று சிநேகிக்கிறதா என்றறிய விரும்பின ஸர்ஜான் லப்பக் என்பவர் 50 எறும்புகளைச் சாராயம் குடிக்கச்செய்தாராம். அவைகள் வெறித்து ஊரமாட்டாமல் தள்ளாடுவதைக்கண்டு வேறே 25 எறும்புகளை இவர் இவைகளிடத்தில் கொண்டு வந்துவிட்டாராம். உடனே அந்த 25 எறும்புகளும் அந்த 50 எறும்புகளையும் பத்திரமாய் இழுத்துக்கொண்டுபோய் ஓரிடத்திற்படுக்கச்செய்தனவாம். ஒருமணிநேரம் சென்றபின் இவைகள் அந்தவிடத்தில் காணப்படவில்லையாம்.

இங்கிலாண்டில் மிஸ் கூட் (Miss Coote) என்ற 21 வயதுப்பெண் பைஸிக்கிலில் சவாரி செய்துகொண்டு உலகஞ்சுற்றிவரத் தீர்மானித்திருக்கிறாள். இவளுடன் இரண்டு தோழிகளும், போவார்களாம். இப்பயணத்திற்கு நாலு வருஷம் பிடிக்குமாம். அங்கங்கு தேசாசாரங்களைப் பார்த்துக்கொண்டு போவார்கள். மேலும் பிரயாணம் முடிந்ததும் பத்திரிகைகளில் தங்கள் அநுபவங்களைப் பிரசுரிப்பார்களாம். மிஸ் கூட் திடமான தேகத்தையுடையவளாம். முன்னமே ஐரோப்பா முழுவதும் சுற்றினவளாம். பல பாஷைகளும் நன்றாகத்தெரிந்தவளாம்.

நாகரீக மின்மை :—இந்து பெண்களில் பெரும்பான்மையோர் நெற்றியிலும், கை, கால்களிலும் பலவிதமாய் பச்சை குத்திக்கொள்ளுகிறார்கள். அப்படிக் குத்திக்

கொள்வது தேகத்திற்கு கஷ்டத்துடன் பணச்செலவும் கொஞ்சம் உண்டு. அன்பான கடவுளால் கொடுக்கப்பட்ட திவ்விய தேகத்தை இப்படி கெடுத்துக்கொள்ளுகிறார்கள். இப்படி குத்திக்கொள்வது சிலர் அழகுக்காக என்று சொல்லுகிறார்கள். இது முற்றிலும் தவறு. இதைப்பார்க்கிலும் தேகத்தை அலங்கரிக்க வேறு வழி யிருக்கிறது. அது எது என்றால் செவ்வையாய்ப் படித்து கல்வியால் அலங்கரித்துக்கொள்வதாம். ஆகையால் பச்சை குத்திக்கொள்ளாம லிருப்பதே நல்லது.

பவானி அம்மாள்:

இப்போது அஸேடிலீன் (Acetylene) என்ற புகையை உற்பத்திசெய்து அதினால் விளக்கெரிக்கிறார்கள். அது ஒரு புதுஏற்பாடு. இந்தவெளிச்சம் மிக்க ஒளிபொருந்தியதாயிருக்கிறது. ஆகையினாலே இது விசேஷமாக உபயோகத்தில் வருமென நம்பப்படுகிறது. இப்போது சென்னையில் சில வண்டிகளுக்கும் பைசிகில்களுக்கும் இந்த வெளிச்சம் உபயோகப்பட்டுவருகிறது. ஆனால் இதில் ஒரு அபாயமிருக்கிறது. இவ்வெளிச்சத்திற்கு ஆதாரமான புகை கால்ஸியம் கார்பைட் (calcium carbide) என்ற பதார்த்தமும் ஜலமும் சேர்ந்து உற்பத்தியாகிறபடியால் ஓர் சமயம் இது திடீரென புகை உட்கொள்ளாமல் வெளியில் வர ஆரம்பிக்கும். அப்பொழுது விளக்கு உடையும். ஆனதுபற்றி இவைகளை வீட்டில் வைக்காமல் வெளியே வைத்து புகையைமட்டும் வீட்டிற்குள்ளே கொண்டுபோய் உபயோகிக்கலாமென லண்டனிலுள்ள சாஸ்திரபண்டிதர்கள் பரீக்ஷித்து அறிந்திருக்கிறார்களாம்.

வருகிற வருஷத்தில் பாரிஸ் நகரத்தில் மிகவினோதம் பொருந்திய கண்காட்சி நடத்தப்படும். இதற்காக அநேகர் மிக உன்னதமான வேலைகளைச்செய்து வருகிறார்கள். உலகத்திலுள்ள புத்திசாலிகளெல்லாம் இதற்கு வருவார்கள். இவ்வினோதங்களில் முக்கியமான தொன்றை எழுதுகின்றோம். 1900௵ பாரிஸ் நகரத்தில் ஒரு பிரஞ்சு தேசத்து மாது கட்டிடத்தைப்போல் ஒரு குடையால் ஏற்படுத்தப்போகிறார். இந்த மகா பெரிதான குடையின் அளவு 300 அடியுயரமுள்ள ஸ்தம்பம்போன்ற கட்டிடம் குடைக்கழியாகும். அதன் குறுக்களவு 120 அடி. குடை விரியுங்காலத்தில் அதன் குறுக்களவு 450 அடி. நடுவில் அமைக்கப்பட்ட குடையைத்தாங்கும் கட்டிடத்தில் நான்கு தளங்களாம். அவைகளில் மூன்று குடைக்குக் கீழாகவும், ஒன்று குடைக்குமேலும் கட்டப்படும். இந்த தளங்களில் சங்கீதக்கச்சேரிகளும், நாடகங்களும் நடக்கும். இந்தக்குடையின் கீழ் (30,000) முப்பதாயிரம் ஜனம் உட்காரலாம். இதற்கு மின்சாரவிளக்கை உபயோகிப்பார்களாம். இது ஒரு அற்புதமான காட்சி என்பதற்குச் சந்தேகமில்லை.

விடுகதைகள்.

1. எங்களப்பன் சொரியன், எங்களாத்தாள் சடைச்சி, நான் சக்கரைக்குட்டி இதென்ன ?

2. ஏற ஏற இதமாயிருக்கும், ஏறினவுடனே எரிச்சலாயிருக்கும், பூர பூர புதுமையாயிருக்கும், பூந்தஉடனே பயமாயிருக்கும்.

3. காலுமில்லை, இறகுமில்லை, கணப்பொழுதில் கோடிகாதமோடும், அது ஆறுகளுக்குமஞ்சாது, மலைகளுக்கும் மயங்காது, சுவர்களுக்குஞ் சலியாது இதென்ன ?

4. சிமிழுஞ் சிமிழுஞ் சேர்ந்தாற்போல் செல்வியர்கொண்டை முடித்தாற்போல் உமிழும்முத்துங் கோத்தாற்போல் உடம்பில் மஞ்சள் பூசினாற்போ லுள்ளதென்ன ?

லக்ஷ்மி அம்மாள்.